# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 139/2015

சாட்சி : PW– 2
பெயர் : திரு. கோவிந்தசாமி தேதி : 03.02.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை தான். இவ்வழக்கு ரமேஷால் பாலாஜி மற்றும் அவரது தம்பியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து 3 அயிட்டங்களாக உள்ளது. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 10 ஆயிரம் ச.அடி ஆகும். 4 ஆயிரம் ச.அடி சுரேஷ் பெயரிலும், 6 ஆயிரம் ச.அடி ரமேஷ் மற்றும் பாலாஜி பெயரிலும் உள்ளது. ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் எத்தனை சதுரஅடிகள் சொத்து உள்ளது என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. நான் வழக்கு சொத்தில் ஹோட்டல் நடத்துவதற்கு ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் ஹோட்டல் நடத்தி வருகிறேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சுரேஷ் அமெரிக்காவில் உள்ளார். 2ம் பிரதிவாதிக்கு நான் ஒவ்வொரு மாதமும் வாடகை செலுத்தி வருகிறேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு 1ம் பிரதிவாதி வாதிக்கு தொல்லைகள் கொடுத்தார். வழக்கு சொத்தில் நான் ஹோட்டல் எதுவும் நடத்தவில்லை என்றும், வாதி

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதராவாகபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி தான் செட் அமைத்து சைக்கிள் ஸ்டேன்ட் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் செல்போன் டவர் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனது வீட்டிலிருந்து 1கி.மீ தொலைவில் உள்ளது. வழக்கு சொத்தில் 40 வருடங்களுக்கு மேலாக பாலாஜி வேயிங் கம்பெனி என்ற பெயரில் லாரி எடைபோடும் நிலையம் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் அவரது ஆட்களும் வழக்கு சொத்திற்கு வந்து தகராறு செய்தததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுகொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem